بسم الله الرحمن الرحيم

WHY CREATING JAMAAT UL SAHIH AL ISLAM?

THE CALIPH OF ALLAH AND MESSIAH, HAZRAT MUNIR A. AZIM (ATBA)

# ஜமாத்துல் ஸஹீஹ் அல் இஸ்லாம் ஏன் தோற்றுவிக்கப்பட்டது?


கலீபத்துல்லாஹ் ஹஸ்ரத் முனீர் அஹ்மது அஸீம்(அலை)



வெளியீடு : அமீர் ஜமாத்

ஜமாத்துல் ஸஹீஹ் அல் இஸ்லாம்

தமிழ்நாடு

# அறிமுகம்

பலர் இக்கேள்வியை அறியாமையால் கேட்கின்றனர். இது ஒரு புதிய மற்றும் சுவாரசியமான கேள்வியாக இருப்பினும் அவர்களுக்கு இது பற்றி சிறிய அளவிலான அறிதலோ அல்லது இது பற்றி முற்றிலும் ஒன்றும் அறியாதவர்களாகவோ இருக்கின்றனர். இவர்கள் சுயமாக இதுபற்றி ஒரு அபிப்பிராயம் கொள்கின்றனர். அல்லது மற்றவர்கள் மூலமாக கேட்பவற்றவை நம்புவதற்கு தலைப்படுகின்றனர். நான் முதலாவதாக ஜமாஅத் அஹ்மதிய்யா அல்-முஸ்லிமீன் பற்றி அறியாமல் பேசும் மக்களுக்கு தெளிப்படுத்த விரும்புகின்றேன். அல்லாஹ்விடமிருந்து மறைவான வெளிப்பாடுகளை நான் பெறுகின்றேன் என்ற ஒரே காரணத்திற்காக நான் அஹ்மதிய்யா ஜமாத்திலிருந்து வெளியேற்றப்பட்டேன் என்பதை நான் உங்களுக்கு முதலில் தெளிவு படுத்த விரும்புகிறேன். மேலும் அஹ்மதிய்யா ஜமாத்தின் உலகளாவிய குறிக்கோளும், உண்மை நோக்கமும் என்னவென்றால் மக்களை இறைவெளிப்பாடுகள் மீது நம்பிக்கை கொள்ள செய்வதாகும். இன்னும் இதுவே வாக்களிக்கப்பட்ட மஹ்தி (அலை) அவர்களது உண்மைக்கும் சான்றாகும்.

இதுவே நம் அஹ்மதி சகோதரர்களின் நம்பிக்கையாகும், மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது நூலிருந்து இறைவெளிப் பாடுகளுக்கான சான்றுகளை காட்டினார்கள். இவ்வாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) தன்னுடைய போதனைகளால் மார்க்கத்திற்கு எல்லாவற்றையும் விட முன்னுரிமை வழங்குபவர்களாக அஹ்மதிகளை வைத்திருந்தார்கள். ஆனால் காலம் செல்ல செல்ல அஹ்மதிகள் கற்றறிந்த உண்மையான மார்க்க நல்லொழுக்கமும் அவர்களது வாழ்வும் முரண்பாடாகி போனது. வெளிப்படையாக பார்க்கும்போது ஒன்று போல தோன்றினாலும் மற்ற முஸ்லிம்களின் தொழுகையிலிருந்து அஹ்மதி முஸ்லிம்களின் தொழுகை வேறு பட்டதாகும். மேலும் இவர்களின் வணக்கத்திற்கான ஆத்மார்த்தமான நிலையும் உண்மையான பொருளும் மற்றவர்களிடமிருந்து முற்றிலும் வேறுபட்டதாகும். மற்ற முஸ்லிம்களின் வணக்க வழிபாடு இவ்வாறானது இல்லையா? என்று எவராவது என்னிடம் கேட்டால் அதற்க்கு

உடனடியாக எந்த தயக்கமும் இன்றி இல்லை என்றே பதில் கூறுவேன். ஏனென்றால் அவர்களிடம் (முஸ்லீம்களிடையே) உள்ள ஒரு கருத்தொற்றுமை என்னவென்றால் இறைவனிடம் இனி நேரடியான தொடர்பு ஏற்ப்பட வாய்ப்பில்லை என்பது அவர்களின் நம்பிக்கையாகும். இறைவன் பேசுவதை நிறுத்திவிட்டான் என்றும், மேலும் இறைவனிடம் வேண்டுதல் மட்டுமே மாற்றங்களை நிகழ்த்தும் என்றும் அவர்கள் நம்புகின்றனர். மேலும் பல நூற்றாண்டிற்கு மேலாக இறை வெளிப்பாடுகளை அவர்கள் மறுத்து வருகின்றனர். ஆனால் முன்பு முஸ்லிம்கள் அருளுக்குரிய இறை வெளிப்பாடுகள் மீது நம்பிக்கை கொண்டிருந்தனர், மேலும் சிலர் தங்களுக்கு இறை வெளிப்பாடுகள் கிடைக்க பெறுவதாக வாதித்தும் வந்தனர். ஆனால் கடந்த ஒரு சில நூற்றாண்டாக முஸ்லிம்கள் முற்றிலுமாய் இறை வெளிப்பாடுகள் தொடர்வதை மறுக்கின்றனர். இன்னும் இந்த நிலைமை எந்த அளவிற்கு சென்றுவிட்டதென்றால் சில முஸ்லீம் தலைமை முல்லாக்கள் இறை வெளிப்பாடுகள் தொடர்வதாக நம்புவதை "இறை மறுப்பு" என்று பத்வா (மார்க்க தீர்ப்பு) கொடுத்துள்ளார்கள்.

மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தனக்கு மட்டுமே இறை வஹி கிடைத்தது என்று ஒருபோதும் கூறவில்லை, எவர் தன்னுடைய போதனையின் படி தன் வாழ்வை உண்மையாகவே அமைத்துக் கொள்கின்றார்களோ, மற்றும் தன்னுடைய அறிவுரைகளை பேணி நடப்பார்களோ அவர்களோடு இறைவன் உரையாடுவான் என்று கூறினார்கள். அன்னார் இது தொடர்பாக இறைவெளிப்பாடுகளை தொடர்ந்து வெளியிட்டார்கள், இறைவனிடமிருந்து கிடைக்கும் இந்த அருளை பெறுவதற்கு முயற்சி செய்ய தன்னுடைய ஜமாத்தினரை ஊக்கப்படுத் தினார்கள். ஆனால் துரதிர்ஷ்டவசமாக இப்போது எனக்கு அன்னாரை ஏற்றுக்கொண்ட நிலையில் இறைவெளிப்பாடுகள் வருவதையும் அதன் மீது ஜபருல்லா டோமன் சாஹிப் நம்பிக்கை கொள்கின்றார் என்ற காரணத்திற்காகவும் எங்கள் இருவரையும் நிஜாமே ஜமாத்திலிருந்து வெளியேற்றினார்கள், மேலும் எங்களை கிளர்ச்சியாளர்கள் என்றும் குழப்பவாதிகள் என்றும் கூறினார்கள், இது குறித்த எனது கருத்தினை கேட்காமலேயே ஜபருல்லா டோமன் முட்டாள்தனமாக என்னுடைய இறை வெளிப்பாடுகளின் மீது நம்பிக்கை கொள்கின்றார் என்றும் தூற்றினார்கள்.

ஜனவரி 6, 2001 என் மீதான இந்த குற்றசாட்டுகளுக்கு காலம் சென்ற நான்காவது கலீஃபா மிர்ஸா தாஹிர் அஹ்மது அவர்களுக்கு விளக்கமளித்தேன், அதற்கு அவர் என்னை தவ்பா- பாவமன்னிப்பு தேடும்படி கூறினார். பாருங்கள் ஒரு மனிதரை திருப்திபடுத்த இறைவன் என் மீது இறக்குகின்ற அவனது வெளிப்பாடுகளை நான் மறுக்க வேண்டுமா? மேலும் ஒரு மனிதனுக்காக பாவமன்னிப்பு கோர வேண்டுமா? அல்லது என்னை படைத்த ரப்பு கூறுவதை கேட்கவேண்டுமா?

இன்னும் நங்கள் சரியாக ஜனவரி 1, 2001 முதல் அஹ்மதிய்யா முஸ்லீம் ஜமாத்திலிருந்து வெளியேற்றப்பட்டோம், மேலும் சிலரோ முனீர் அஹ்மதின் வெளிப்பாடுகள் காரணமாகத்தான் இவர்களுக்கு இந்த நிலை என்று மக்களிடையே வெறுப்புணர்வுகளை விதைக்க தொடங்கினர், இத்தகைய வெறுப்பு பிரச்சாரங்களுக்கிடையே நாங்கள் ஜும்மா தொழுகையை அஹ்மதிய்யா பள்ளிவாசலில் தொடர்ந்து தொழுது வந்தோம். அவர்கள் அனைவரும் தங்கள் கேலி மற்றும் பரிகசிப்பதை தொடர்ந்தார்கள், இவ்வாறு ஏளனம் செய்வதில் பெரும் மகிழ்ச்சி அடைந்தார்கள், அது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தன்னுடைய இறைவெளிப்பாடுகளை வெளியிட்டபோது அக்காலத்தின் முஸ்லிம்கள் எவ்வாறு ஏளனம் செய்தார்களோ அதனை ஒத்ததாகவே இருந்தது. சகோதர சகோதரிகளே வரலாறு இப்போது எப்படி திருப்பி இருக்கிறது என்று பாருங்கள்.

இத்தகைய நிகழ்வுகள் எல்லையை மீறும்போது அல்லாஹ் எங்களை தனியாக ஜும்மாவை தொழ வேண்டும் என்று புரிதலை வழங்கினான், இன்னும் அவர்கள் இறை அடையாளங்களை புறகணித்தார்கள், மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது மேடையை எங்களை பற்றி புறங்கூறுவதற்கும் பயன்படுத்தினார்கள். திருக்குரான் வசனங்களை வைத்து விளக்கம் கொடுப்பதற்கு பகரமாக இந்த எளியவன் பற்றியும், ஜபருல்லா டோமன் சாஹிப் அவர்களை பற்றியும் ஜமாத் மக்களிடையே இளைஞர்கள் உட்பட அனைவரிடத்தும் வெறுப்பை வளர்ப்பதற்காக நீண்ட உரைகளை ஆற்றினார்கள். இவ்வாறு அவர்கள் எனக்கு இறங்கிய இறைவெளிப்பாடுகளுக்கு எதிராக மக்களிடம் வெறுப்பினை வளர செய்தார்கள்.

இந்த நிலையில் அல்லாஹ் படிப்படியாக ஒரு புதிய ஜமாத்தினை தோற்றுவிக்கப்பட வேண்டும் என்று புரிய வைத்தான், அந்த ஜமாத்திற்கான பெயரையும் "ஜமாத் அஹ்மதிய்யா அல் முஸ்லிமீன்" என்றும் அறிவித்து கொடுத்தான். நான் வெளிப்படையாக கூறுகின்றேன் நான் பெற்ற இறைவெளிப்பாடுகளில் கிலாஃபத்திற்கு எதிரான எதையும் நான் வெளிப்படுத்தவில்லை, ஆனால் துரதிர்ஷ்டவசமாக முற்காலங்களில் அல்லாஹ்வால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுடன் எவ்வாறு பரிமாற்றம் செய்யப்பட்டதோ அவ்வாறே இப்போதும் நடந்து கொள்ளப்பட்டது, எங்கள் தரப்பிலிருந்து எந்த விளக்கத்தையும் பெறவும் இல்லை, இறைவனிடம் பிரார்த்தனை செய்து அவனிடமிருந்து வழிகாட்டுவதற்காகவும் இறஞ்சவும் இல்லை.

**குறிப்பு:- நான்காவது கலீபாவிற்கு *16,* ஜனவரி *2001* அன்று அவருக்கு இறை வெளிப்பாடுகளை பற்றி விளக்கம் அளித்த கடிதம்*.***

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ 1/3

16 January 2001

To Hazrat Khalifatul Masih IV
The London Mosque
London

Respected Hazur,

Assalamo alaikum Warahmatullahe Wabarakaatohu

We refer to Tabshir's fax dated 8th January 2001 addressed to Mr Amine Jowahir, Amir Jamaat Mauritius.

We have no objection whatsoever to apologize for any of our misdeeds.
However, in a spirit of fairness and justice please be kind enough to specify our misdeeds so that when we make *istighfaar* we may remember them and make a serious attempt not to commit them again incha Allah.
Up till now we have not received any correspondence whatsoever where our misdeeds have been spelled out although we have already been sentenced with expulsion from the jamaat.

So many times in his Khutbahs Hazur has told us not to take one sided view of any matter and in this particular case it is only the view of the Amir saheb that has been given consideration and we have not even been asked our view at all.

What procedures are we following when **Mr Gance Jahangeerkhan** who is so close to Hazur sends **a slanderous and spiteful letter full of false accusations** to be circulated among members of his family warning them about **the dangers of associating with us, calling me(ZD) a ringleader and reminding them that my(ZD) parents have been cursed by Hazrat Khalifatul Masih II and that now the present Khalifa also has wished us(Munir&I) "a fearful end".** The circular letter was supposed to be personal but it was written on **Jamaat's letterhead** and it was widely circulated in Mauritius and it was also addressed to the Amir Jamaat. **Allah Knows better who are the real mischief makers In the Jamaat !**

We wonder if the Amir saheb who is so keen in following Hazur's instructions ask Hazur for permission before announcing our expulsion in all mosques on Tuesday 2nd January and then using **25 minutes of the khutbah Jummah of 5th January** in all our mosques to feast himself and the jamaat on the dead meat of two persons who were not given any opportunity to defend themselves. He used the **mimbar as a representative of the khalifa to BACKBITE, to SLANDER** and to use **RUMOUR** in order to depict **us as two enemies** of the jamaat. Allah says in the Holy Quran :

**Woe to the backbiter, slanderer....**

The Amir Saheb has said that we have said that we do not believe in Khilafat . **We say that this is totally false.** It is only the **wrong,personal ,biased conclusion that the Amir Saheb took by misunderstanding a verse that was quoted.**
We had never spoken about any new jamaat at all; we wonder why is there such an emphasis that we should go away and form a new jamaat . If there is a misunderstanding between us we think that we can solve it in a brotherly way. There is no need to show such animosity and such verbal violence.

**We commit our affairs in the HANDS of ALLAH !**

**Allah is Sufficient for us .- He is *ne'mal Mawla Wa ne'man Nasir . He is Khayroun Hafezo wa ar hamour rahemeen .***

***Hasbonallaho wa ne'mal wakil***

To end we are sending three of what Tabshir calls " **So called inspirations**".

**LOVE FOR ALL HATRED FOR NONE**

**Mere talk of peace will avail you naught**
**Mere talk of god and religion will not take you far**
**Bring out all the latent powers of your being**
**And reveal the full magnificence of your immortal self**
**Be surcharged with peace and joy**
**And scatter them wherever you are, wherever you go.**
**Be a blazing fire of truth, be a beauteous blossom of love**
**And a soothing balm of peace with your spiritual light.**
**Dispel the darkness of ignorance,**
**Dissolve the clouds of discord and war.**
**And spread goodwill, peace and harmony among the people.**
**Never seek any help, charity or favours from anybody except God**
**Never go to the courts of kings,**
**But never refuse to bless and help the needy and the poor,**
**The widow and the orphan if they come to your door.**
**This is your mission - TO SERVE THE PEOPLE.**
**************************************************

**Our Lord keep our hearts constantly obeying Thy commands**
**Our Lord fill our hearts with Thy knowledge**
**Night or day make us wholly engaged in your service**
**Gather us in the company of the righteous, those who served you before us.**
**Grant us sustenance like they received**
**And be unto us as Thou were unto them.**
**Ameen**
**************************************************

**Ya Rabbana laka wajahto wajhi**
**Faqbil élayya be wajhekal kareem**
**Wastaqbilni be ma'rdi afwaéka wa karaaméka**
**Wa anta zahekoun élayya wa radin anni**

**The Translation as received in French is as follows:**

> **Seigneur C'est à Toi que je tourne mon visage**
> **Viens donc vers moi par Ta Noble Face**
> **Et accueilles par Ton pur pardon et Ta Générosité**
> **Content et satisfait de moi.**

**We hope this letter may clarify the prevailing misunderstanding and that we may remain true and faithful members of the Nizaamé Jamaat.**

Wassalaam

Zafrullah Domun

Munir Azim

P.S We are sending a copy of this letter to the Amir Saheb with a strict request that its contents are not to be made public. We are well aware that recently a confidential letter has been shown to at least one member who had nothing to do with the administration of the jamaat.

காலஞ்சென்ற நான்காவது கலீஃபதுல் மஸீஹ் என்னுடைய விளக்கத்தை (அதாவது எனக்கு கிடைக்கும் இறை வெளிப்பாடுகள் பற்றி) கேட்கவில்லை என்பது வேதனையான விசயமாகும்.

அவர் என்னுடைய கடிதத்தை குறித்து இவ்வாறு கூறினார். இருவர் இந்த ஜமாத்திலிருந்து தூக்கி எறியப்பட்டனர். அதற்கு பகரமாக மில்லியன் மக்கள் ஜமாத்தில் இணைவார்கள். அவர்களை போக விடுங்கள். அவர் தங்களுடைய ஜமாத்தினை அமைக்கட்டும். நான் முன்பே குறிப்பிட்ட போல இவர் ஜபருல்லா டோமன் சாஹிப் அவர்களை "மூடர்" என்று கூறுகின்றார் அதற்கு காரணம் எனக்கு கிடைக்கும் இறைவெளிப்பாடுகள் மீது அவர் கொள்ளும் நம்பிக்கையே ஆகும். அவர் எங்களை சபித்தார், அல்லாஹ்வின் சாட்சியாக கூறுகின்றேன் அவர் எப்போது இந்த அறிக்கையை வெளியிட்டாரோ அப்போது மறைவானவருடைய அறிக்கையை கசக்கி குப்பையில் எறிவதை நான் கண்டேன். அப்போது ஒரு குரல் ஒளிப்பதை கேட்டேன் (நான் அது அல்லாஹ்வின் குரல் என்பதை புரிந்து கொண்டேன்) அதில் எனக்கு இவ்வாறு கூறப்பட்டது "இது முபாஹலா ஆகும்" மேலும் இவர்களின் அச்சுறுத்தல்கள் ஒன்றுமற்றதாகும் அதாவது இவர்களால் இந்த எளியவனுக்கு எந்த தீங்கும் செய்ய இயலாது என்பதாகும்.

இவ்வாறு அஹ்மதி சமூகத்தின் தலைமை தன்னுடைய தீய முன்மாதிரியை காட்டியது. மற்றும் அருளுக்குரிய இறைவெளிப்பாடுகளிலிருந்தும் இச்சமூகம் பயன் பெறவில்லை.

மேலும் நான் அத்தருணத்தில் முஜத்தீத் என்றோ மஸீஹ் என்றோ வாதம் செய்யவில்லை (இவை யாவும் நான் இறைவெளிப்பாடுகளை பெறுகின்றேன் என்பது மட்டுமே ஆகும்). இவ்வாறான ஒன்பது வருட இத்தகைய சோதனைகளுக்கு பிறகு இப்போது நான் பகிரங்கமாக அறிவிக்கின்றேன். அல்லாஹ் எனக்கு "அமீருல் முஃமீன்" (நம்பிக்கையாளர்களின் தலைவர்) முஹையதீன் (மார்க்கத்திற்கு மறுவாழ் வளிப்பவர்) மற்றும் கலீபத்துல்லாஹ் (அல்லாஹ்வின் பிரதிநிதி) போன்ற மேலான பதவிகளை வழங்கினான்.

ஜமாத் அஹ்மதிய்யா அல் முஸ்லிமீன் இயக்கத்தின் தருணத்திலேயே அல்லாஹ் எத்தகைய உயர்வினை வழங்குவான் என்பதை எனக்கு காட்டி தந்தான். இருப்பினும் அது வாதத்திற்கான காலமாக இருக்கவில்லை என்பதையும் உணர்த்தினான். இத்தகைய வாதங்களை அல்லாஹ் அறிவிக்குமாறு அறிவுறுத்தினான். மேலும் அவர்கள் கூறியவாறு எதுவும் அப்போது வெளிப்படவில்லை. இந்த நிலையில் இக்காலத்தின் முஹைய்தீன் என்று 6 டிசம்பர் 2003 (ஜமாத் அஹ்மதிய்யா அல் முஸ்லிமீன் காலகட்டத்தில்) என்னுடைய வாதத்தில் நான் கூறினேன் "எனக்கு பணமோ பதவியோ தேவையில்லை நான் அல்லாஹ்வின் புறமிருந்து மனித குலத்தை எச்சரிக்கை செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ளேன். இதனை நீங்கள் ஏற்றுக்கொண்டால் இம்மையிலும் மறுமையிலும் வெற்றியடைவீர்கள், இதனை நீங்கள் நிராகரித்தால் அல்லாஹ் நமக்கிடையில் தீர்ப்பளிப்பான். இன்று முதல் அல்லாஹ்வை சாட்சியாக வைத்து அறிவிக்கின்றேன் "நானே இக்காலத்தின் முஹைய்தீன்- மார்க்கத்திற்கு புத்துயிர் அளிப்பவன்" ஆவேன்.

மேலும் அல்லாஹ்வின் தூதராகிய இந்த எளியவன் உங்கள் மத்தியில் ஜமாத் அஹ்மதிய்யா அல் முஸ்லிமீன் (2002 டிசம்பரில் இறைவஹி மூலம் தோற்றுவிக்கப்பட்டது.) பற்றி சரியாக அறியாமல் ஆட்சேபனை செய்யும் சிலருக்கு என்னால் முடிந்த அளவிற்கு அவர்களுக்கு விளக்கம் கொடுக்க முயற்சி செய்கிறேன் மற்றும் அதற்கு மாற்றாக தோற்றுவிக்கப்பட்ட ஜமாத்துல் ஸஹீஹ் அல் இஸ்லாம் பற்றியும் விளக்குவேன்.

இன்னும் சிலரோ, எதிரிகள் மூலம் எதனை கேட்கின்றனரோ அதனையே இவ்விரு ஜமாத்துக்கள் தொடர்பான உண்மை என்று கருதுகிறார்கள், அல்லாஹ் எதற்காக இவ்விரு ஜமாத்துகளை தோற்றிவித்தான் என்ற உண்மையை அக்கறையுடன் சுயமாக படித்து தெரிந்து கொள்வதில்லை. ஜமாத் அஹ்மதிய்யா அல் முஸ்லீமின் எந்த நோக்கத்திற்காக அல்லாஹ் ஏற்படுத்தினான் என்றால் இக்காலத்தில் இறைவன் புறமிருந்து தோன்றியவரின் உண்மை தன்மையை நிலைநாட்டுவதற்காக ஏற்படுத்தினான். ஜமாத் அஹ்மதிய்யா அல் முஸ்லீமின் என்ற பெயரை அல்லாஹ் தேர்ந்தேடுத்து அவனின் நிழலின் கீழ் தன்னுடைய முஹைய்தீனையும் அவர்

மீது நம்பிக்கை கொண்ட மக்களையும் பாதுகாத்தான். ஏறக்குறைய மூன்றிலிருந்து நான்கு ஆண்டுகள் அல்லாஹ்வின் தூதராகிய இந்த எளியவன் ஆன்மீக தலைவராகவும், ஜமாத் அஹ்மதிய்யா அல் முஸ்லீமினின் தலைவராகவும் அந்த ஜமாத்தை வழி நடத்தி சென்றேன். ஜமாத் முறைப்படி பதிவும் செய்யப்படிருந்தது. ஆனால் ரகசியமாக ஜமாத்தின் சில நபர்கள் எனக்கு அல்லாஹ்வின் புறமிருந்து கிடைக்கும் இறை வெளிப்பாடுகளுக்கு எதிராகவும், வழிகாட்டுதலுக்கு எதிராகவும் குழப்பத்தை தோற்றுவித்தார்கள். சதிகள் மெதுவாக துவங்கியது. ஆனால் உறுதியாக துவங்கியது. அதற்கு இவர்கள் இறைவெளிப்பாடுகள் மீது கொண்ட கருத்து வேறுபாடுகளே ஆகும். மேலும் பெரும்பாலான ஜமாத் உறுப்பினர்கள் அல்லாஹ்வின் வெளிப்படுகளுக்கு எதிராக குழப்ப விளைவிக்கவும், என்னுடன் செய்த பையத் உடன்படிக்கையை முறிக்கும் நிலைக்கும் ஆளானார்கள்.

I. ஏப்ரல் 19, 2003 அஹ்மதிய்யா ஜமாத்தின் நான்காவது கலீஃபா அன்றுதான் இறந்தார்கள். 25, நவம்பர் 2005 ஆம் ஆண்டு ஜபருல்லா டொமன் சாஹிப் இவ்வாறு அறிக்கை வெளியிட்டார். அதாவது, அஹ்மதிய்யா ஜமாத்தின் தலைவர் மிர்ஸா தாஹிர் அஹ்மது இறந்துவிட்ட நிலையில் இப்போது புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் முனீர் அஹ்மத் அஸீம் அவருடைய கையில் பையத் செய்கின்றோம்" மேலும் அவர் வெளியிட்ட நாளிலேயே அல்லாஹ் அவருக்கு அமீருல் முஃமினீன் மற்றும் அவர் பெயருக்கு முன் "ஹஸ்ரத்" என்று போடுவதை ஒப்புக்கொண்டான்.

II. 2003 ம் ஆண்டு 6 வது இரவும், 7 வது நாளும் முறையே மூன்று முக்கிய நிகழ்வுகள் ஜமாத் அஹ்மதிய்யா அல் முஸ்லிமீனில் மறக்க முடியாததாகும். பெரும்பான்மையான மக்களின் உள்ளங்களில் எனக்கு எதிரான போக்கு இருப்பது தெரிய வந்தது (இதில் குடும்ப பிரச்சினை காரணமாக ஜபருல்லா டோமனும் இதில் இணைந்திருந்தார்) 2007 ஆம் ஆண்டு அல்லாஹ் இவர்களை கண்காணிக்கும்படி எனக்கு கட்டளையிட்டான், அவர்கள் இந்த எளியவனுக்கு எதிராக நடக்க தொடங்கினர், ஒவ்வொருவரும் தன்னுடைய சுய விருப்பத்தினை பின்பற்ற தொடங்கினர். எதச்சதிகார முறையில் எனக்கு ஒரு சிறப்பு கூட்டத்திற்கு அழைப்பு கொடுத்தார்கள். அதில் பல குற்றச்சாட்டு

சுமத்துவதற்கும், இறைவெளிபாடுகளுக்கும், நான் பெறும் மறைவான செய்திகளை குறித்து பல்வேறு கேள்விகளை எழுப்பும் நோக்கிலும் அக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. எனக்கு இத்தகைய அதிகாரப்பூர்வ மற்றும் தனிப்பட்ட அழைப்புகள் வந்ததோ அப்போது நான் இறைவனிடம் இது தொடர்பாக பிரார்த்தனை செய்வதன் பக்கம் திரும்பினேன், ஆனால் அல்லாஹ் இத்தகைய கூட்டத்திற்கு செல்வதற்கு எந்த கட்டளையும் இடவில்லை. பல முறை இம்மக்களை குறித்து அல்லாஹ் வெளிப்பாடுகளை இறக்கி இவர்களை "நயவஞ்சகர்கள்" என்று அறிவித்தான் (ஒரு சில தூய நிலையில் உள்ளவர்கள் தவிர - அவர்கள் அல்லாஹ்வின் மீதும் இந்த எளியவன் மீதும் உளமார நம்பிக்கை கொண்டிருந்தனர் - அல்லாஹ் அவர்களை காப்பாற்றினான்) எவர்கள் என் பக்கம் இருந்தார்களோ, எவர்கள் என்மீதும் இறங்கும் இறை வெளிப்பாடுகளுக்கு சாட்சிகளாக இருந்தார்களோ அவர்கள் மீதும் என் மீதும் மறைவான போர் ஆரம்பமானது.

இருந்தபோதிலும் பிளவுகளை ஏற்படுத்தாது ஒன்றினைக்கும் நோக்குடன், அவர்கள் என் மீதான நம்பிக்கையை முறித்ததாக கூறிய அவர்கள் எழுதிய அதிகாரப்பூர்வ கடிதத்திற்கு நான் பதில் கடிதம் எழுதினேன். 31, ஜுலை 2007 முதல் இவர்கள் என் மீதான நம்பிக்கையை முற்றிலும் இழந்துவிட்டார்கள், அன்று முதல் ஏற்கனவே இந்த எளியவனின் கையில் ஏற்கனவே பையத் (மார்க்க உடன்படிக்கை) செய்திருந்த ஜபருல்லா டோமன் சாஹிப் அவர்களுக்கு கட்டுபட்டுநடக்க தொடக்கினார்கள். இவ்வாறு நிலமை மெதுவாக மோசமாகி கொண்டிருந்தது, இறுதியாக மேலாண்மை குழு அதிகாரப்பூர்வமாக எனக்கு கடிதம் மூலம், எனது கட்டுபாட்டில் உள்ள ஜமாத்தின் சொத்துக்களை திருப்பி அனுப்புமாறு கேட்டுக்கொண்டார்கள். இவ்வாறு அல்லாஹ்வின் தூதரை அவர்கள் ஜமாத் அஹ்மதிய்யா அல் முஸ்லீமினில் வெறும் ஒரு உறுப்பினராக மட்டுமே கருதினார்கள் என்பது அவர்கள் அனுப்பிய கடிதம் மூலம் தெரியப்படுத்தினார்கள். அதன் பிறகும் அல்லாஹ்வின் தூதர் என்ற நிலையில் இத்தகைய குழப்பங்களை பொருட்படுத்தாமல் என்னுடைய பிரச்சார பணிகளில் என்னுடைய முழு கவனத்தையும் செலுத்தினேன். இதற்கிடையில் பல் சமய கருத்தரங்கம் ஒன்றை நடத்தினேன் அதில் மற்ற மார்கங்களின் தலைவர்கள் பங்கேற்றனர். அது உள்ளூர் பத்திரிக்கை எல் எக்ஸ்பிரஸ் (L Express) இல் வெளிவந்ததாக (12

நவம்பர் 2007 ல் ) இமெயிலில் செய்தி கிடைத்து. அதில் என்னை பற்றி நான் ஜமாத்தின் தலைவர் என்று குறிப்பிடவில்லை, ஆனால் அதில் அச்சு பிழை இருந்தது. அதில் என்னை ஜமாத்தின் தலைவர் என்றே குறிப்பிட்டார்கள், இதனால் ஆத்திரமடைந்த ஜபருல்லா டோமன் மற்றும் அவருடைய சகாக்கள், இனி ஒரு முறை ஜமாத்தின் பெயரை நான் பயன்படுத்தினால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என தெரியவித்தார்கள். ஆனால் 48 மணி நேரத்திற்கு முன்பாகவே சட்டப்படி ஒரு நோட்டீஸை அனுப்பி அதில் இனி எக்காரணம் கொண்டும் ஜமாத்தின் பெயரை நான் பயன்படுத்த கூடாது என்று குறிப்பிடப்பட்டு இருந்தது. மேலும் ஜமாத்தின் பெயரை (அதாவது அல்லாஹ் அவனுடைய வஹியின் மூலமாக எனக்கு நல்கிய - ஜமாத் அஹ்மதிய்யா அல் முஸ்லிமீன்) நான் இனி பயன்படுத்தினால் சட்டப்படி கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் எச்சரிக்கை செய்யப்பட்டு இருந்தது. என்ன ஒரு நகைப்பிற்குறிய விசயம் இது என்பதை கவனியுங்கள். இவர்கள் இவ்வாறு அல்லாஹ் இக்காலத்தில் தேர்ந்தெடுத்த அவனுடைய அன்பிற்குரிய தூதரை விட உயர்ந்தவர்கள் என்றும் அல்லாஹ்வின் தூதரின் மீது வெற்றிக் கொள்பவர்கள் என்றும் கருதிக் கொண்டார்கள்.

ஜபருல்லா டோமனின் குழுக்கள் நியமித்த வழக்கறிஞர் 03, டிசம்பர் 2007 தேதியிட்ட கடிதத்தில் இவ்வாறு குறிப்பிட்டார் "என்னுடைய சேவைகள் இனி ஜமாத்திற்கு தேவையில்லை என்று குறிப்பிட்டார்" அவன்யு பெங்காலி, 3 லெஸ் குபீஸ், பைலஸ் (ஜமாஅத் முகவரி). நீங்கள் ஜமாத்தின் பிரதிநிதியாக ஆவதற்கு உங்களுக்கு சட்டப்படி அதிகாரம் இல்லை, ஜமாத் உறுப்பினர்கள் உங்களுக்கு ஆதரவளித்தாலும் சரியே. தொடர்ந்து பிடிவாதமாக இருந்தால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சட்டத்திற்கு புறம்பான செயல்களுக்கு உங்களின் சொந்த செலவில் நடவடிக்கைகள் எடுக்கப்படும். என்று அறிவித்த வழக்கறிஞர் அதில் தன்னுடைய முத்திரையை வைத்திருந்தார். பின்வரும் அல்லாஹ்வின் வெளிப்பாடு இவ்வாறு நிறைவேறியது "நாளை இந்த உலகம் உன்னை விட்டுவிடலாம், ஆனால் அல்லாஹ் உன்னுடன் இருப்பான், ஆனால் உலகமே உன்னிடம் இருந்து அல்லாஹ் உன்னிடம் இல்லை என்றால் உண்மையில் உன்னிடம் ஒன்றுமேயில்லை என்பதாகும்"

அல்லாஹ் இந்த எளியவனுடன் எல்லா நிலையிலும் என்னுடன் இருந்தான். அல்லாஹ் என்னுடைய உள்ளத்தை அறிந்தவன். அவனுடைய பணிகளில் என்னுடைய விசுவாசத்தையும் அவன் நன்கறிந்தவன். அல்லாஹ்வின் கட்டளைகள் அனைத்து மனிதர்களது முடிவுக்கு முன்பே வெளிப்படுகிறது, அவனுடைய முடிவுகளையும், விருப்பங்களையும் தடுப்பதற்கும், மாற்றுவதற்கும் எந்த மனிதனுக்கும் சக்தி இல்லை. இத்தகைய சூழ்நிலையை கண்ட நானும் என் மீது நம்பிக்கை கொண்ட என் சாஹாபிகளும் பொறுமை மற்றும் பிரார்த்தனையின் பக்கம் கவனம் செலுத்தினோம். மிகுந்த உருக்கமான பிரார்த்தனைக்கு பிறகு (டிசம்பர் 2007) அல்லாஹ் புதிய ஜமாத்திற்கு "ஜமாத்துல் ஸஹீஹ் அல்-இஸ்லாம்" என்ற பெயரினை அறிவித்து கொடுத்தான். ஜமாத்துல் ஸஹீஹ் அல் இஸ்லாம் 10, மார்ச் 2008 (1ரபி-உல்-அவ்வல், ஹிஜ்ரி வருடம் 1429) அன்று தோற்றுவிக்கப்பட்டது.

நான் அனைத்து சகோதரர, சகோதரிகளின் ஜமாத்துல் ஸஹீஹ் அல் இஸ்லாம் என்பது புதிய மார்க்கமல்ல, அது இஸ்லாத்தின் மற்றொரு பெயர் மட்டுமே என்பதனை கவனத்திற்கு கொண்டு வருகின்றேன். இதனால் ஜமாத்துல் ஸஹீஹ் அல் இஸ்லாம் தோற்றுவிக்கப்பட்டது ஏனென்றால் ஜமாத் அஹ்மதிய்யா அல் முஸ்லீமின் எத்தகைய நோக்கத்திற்காக தோற்றுவிக்கப்பட்டதோ அதே உண்மையான நோக்கில் தோற்றுவிக்கப் பட்டதாகும். இத்தகைய உண்மையான நோக்கத்தினை ஜமாத் அஹ்மதிய்யா அல் முஸ்லீமின் நிறுத்தி கொண்டதோ, அப்போது அல்லாஹ் தன்னுடைய தூதருக்காக வேறொரு புதிய ஜமாத்தினை தேர்ந்தெடுத்தான்.

அவன் என்னிடம் கூறினான்: "**என்னுடைய முஹைதீனே! சதிகளும், புறம் கூறுவதை உன் மீது இவர்கள் கட்டவிழ்த்து விடுவார்கள் என் தூதரே, ஆனால் கவலையடையாதீர், நான் உன்னையும் உன் மீது உண்மையாக நம்பிக்கை கொண்டவரையும் ஒருபோதும் கைவிட மாட்டேன். நீங்கள் தாக்கபடும் போது, அதற்காக நான் தாக்குவேன், ஆனால் பொறுமை தான் சிறந்தது, அவர்களது முடிவினை நீங்கள் காண்பீர்கள். அவர்கள் மீது உனக்கு நான் வெற்றியை கொடுப்பேன்**. ஜமாத்துல் சஹீஹ் அல் இஸ்லாம் ஜமாத்தானது எதனை ஜமாத்தே அஹ்மதி

ய்யா அல் முஸ்லீமின் மூலமாக செய்வதாக அல்லாஹ்விடம் உன் கை மூலாமாக உறுதியளித்த பின்னர் நிராகரித்தார்களோ அதனை இந்த ஜமாத் மூலம் நிறைவேற்றப்படும். உன் மீது உண்மையான நம்பிக்கை கொண்டவர்கள் வெற்றி பெறுவார்கள். ஆனால் நயவஞ்சகர்கள் நிச்சயமாக தோல்வி அடைவார்கள். இறைத்தூதர் வருகை தரும் போதெல்லாம் அவருடைய சமூகத்தினர் அவரை எதிர்ப்பது ஒன்றும் புதிய விஷயமல்ல. இது போன்ற வரலாறு ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுடையதாகும்.

திருக்குரான் இவ்வாறு இதனை விளக்குகிறது

நிச்சயமாக நாம் மூஸாவுக்கு வேதத்தை வழங்கினோம் . பின்னர் அது குறித்து கருத்து வேறுபாடு உருவாயிற்று. உம்முடைய இறைவனிடமிருந்து முன்னரே இறங்கிவிட்ட வாக்கு (தடையாக) இருந்திராவிடில், அவர்களுக்கிடையே (என்றைக்கோ) தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கும். இப்பொழுது அவர்கள் இதைக் குறித்து மன அமைதியினைக் குலைக்கக்கூடிய ஐயத்திற்குள்ளாகி இருக்கின்றனர். (திருக்குர்ஆன்11: 111)

அல்லாஹ் இந்த ஜமாத்தை என் கையில் ஒப்படைத்து இதனை மிகத்தூய்மையான ஜமாத்தாகவும், இஸ்லாம் அதன் ஆரம்ப காலத்தில் இருந்த அதேத் தூய்மையுடன் நிலைப்பெற வேண்டும் என்பதற்காகவும் உருவாக்கினான். இதன் கலிமா அது இஸ்லாத்தின் கலிமாவேயாகும், அது ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் கொண்டுவந்த கலிமாவாகிய "வணக்கத்துக்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறுயாருமில்லை, முஹம்மது அவனுடைய திருத்தூதராவார்" என்பதுமேயாகும். ஜமாத்துல் ஸஹீஹ்அல் இஸ்லாம் என்பது இதுவேயாகும்.

நாங்கள் இவ்வுலகினை ஒர் இறைவன் பக்கமே அழைக்கின்றோம், அவனே இந்த பிரபஞ்சத்தை படைத்தவன், அவன் இணை துணைகள் அற்றவன், அவனுடைய ஆற்றல் எல்லையற்றதாகும், அனைவரையும் நிலை நிறுத்துபவன் அவனே, அனைவருக்கும் தகுந்த வெகுமதிகளை வழங்குபவன் அவனே, அவன் அழகிய திருப்பெயர்களைக் கொண்டவன் என்று திருக்குரான் கூறுகின்றது. மேலும் அவன் குறைபாடுகள் அனைத்திலி

லிருந்தும் தூய்மையானவன் என்றும் திருக்குரான் எடுத்துரைக்கின்றது. எனவே ஜமாத்துல் ஸஹீஹ் அல் இஸ்லாம் அப்துல்லாஹ்வின் மகனும் மக்காவாசியுமாகிய, குறைஷி குலத்தைச் சார்ந்த முஹம்மது (ஸல்) அவர்களை அல்லாஹ்வின் திருத்தூதர் என்றும் வேதம் வழங்கப்பட்ட நபிமார்களில் இறுதியானவர் என்றும் நம்பிக்கை கொள்கின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முழு மனித குலத்திற்குமான தூதர் என்றும் அவர்கள் எந்த இனத்தையோ, நிறத்தையோ, தேசத்தை உடையவராக இருப்பினும் சரியே என்பதன் மீது உளமார நம்பிக்கை கொள்கின்றது. **இறைவனின் வஹியை பெறுவதனாலேயே அன்னார் இவ்வாறு இறைவனின் திருத்தூதரானார்கள்.** அன்னார் (ஸல்) அவர்கள் மனித குலம் நிலைபெற்றிருக்கும் இறுதி நாட்கள் வரையுமான இறைவனின் திருத்தூதராவார்கள். அன்னாரின் போதனைகளே இப்போது மனிதர்கள் பின்பற்ற தகுந்த ஒரே போதனையாகும். எவர்கள் அன்னாரின் தூது செய்தியைப் பெற்ற பின்னரும் அன்னாரை நிராகரிப்போர் இறைவனின் ஆக்கினைக்கு ஆளாவார்கள்.

அன்னாரை பற்றி அறிந்த அனைவரும் அவர்கள் மீது நம்பிக்கை கொள்வது அவசியமாகும். அன்னாரின் மீது நம்பிக்கை கொள்ளாமல் இரட்சிப்பு பெறுவதற்கான எந்த வழியுமில்லை, மனிதர்கள் பெறவேண்டிய தூய்மையும், ஆன்மீக நல்லொழுக்கமும் அன்னாரை பின்பற்றுவதால் மட்டுமே அடைந்திட இயலும். எங்களுடைய இச்சிறு நூலைபடிப்பவர்கள் எங்களின் நம்பிக்கை என்ன என்பதை அதாவது, நாங்கள் இறைவன் ஒருவனென்றும், எங்களின் தூய தூதர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்றும், திருக்குரான், ஹதீஸ், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) மேலும் இஸ்லாம் கடைமையாக்கியுள்ள தொழுகை, நோன்பு, ஜகாத், ஹஜ் மற்றும் இறுதி தீர்ப்பு நாளின் மீது நம்பிக்கை கொண்டவர் என்பதையும் அறிந்து கொள்வார்கள்.

இங்கே மற்றவர்கள் ஒரு கேள்வியை எழுப்புகின்றார்கள் "இஸ்லாமே உங்கள் மார்க்கமாக இருக்கும் போது நீங்கள் புதிதாக ஜமாத்துல் ஸஹீஹ் அல் இஸ்லாம் என்ற பெயரில் ஜமாத்தை நிறுவ வேண்டிய அவசியம் என்ன" என்பதே அந்த ஆட்சேபனையாகும். இன்னும் அஹ்மதி என்ற நிலையில் மார்க்க கடமைகளில் எந்த வித்தியாசமும் இல்லையென்றால் புதியதாக ஒரு

ஜமாத்தை தோற்றுவிக்கப்பட வேண்டிய அவசியம் என்ன? பெரியதாக வித்தியாசம் இல்லாத நிலையில் தனித்து எதற்காக போக வேண்டும், இக்கேள்விகள் மிகவும் முக்கியமானதாகும். இதற்கு பல்வேறு வகையில் பதிலளிக்கலாம். ஜமாத்துல் ஸஹீஹ் அல் இஸ்லாம் மூலமாக இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்திற்கான நன்மைகள், இதனை மற்ற வகையில் இந்த கேள்விக்கு பெருமிதத்துடன் பதில் கூறுவது என்றால் இறைவன் தன் புறமிருந்து மார்க்க சீர்திருத்தவாதிகளை அனுப்பி ஒரு நம்பிக்கை கொண்ட சமூகத்தை எழுப்புகின்றான். இன்னும் இக்கேள்விக்கு எளிமையான பதில் என்னவென்றால் ஒரு ஜமாஅத் எண்ணிக்கையின் அடிப்படையில் தோற்றுவிக்கப்படுவதில்லை. மேலும் தனி நபரோ, கூட்டமாகவோ அல்லது குறைந்த நபர்களோ அவர்கள் பொதுவான ஒரு நோக்கத்திற்காக இணையவில்லை என்றால் அது ஜமாஅத் ஆகாது. இன்னும் அந்த நோக்கத்திற்காக ஒன்றிணைந்து செயல்படாத வரை அது ஒரு ஜமாஅத் ஆக முடியாது. நமக்கிடையில் ஒரு நோக்கம் இருக்குமென்றால் நாம் எவ்வளவு குறைந்த அளவில் இருந்தாலும் நாம் ஒரு ஜமாத்தே ஆவோம். தனிநபர்கள் எந்த ஒரு குறிப்பிட்ட செயல் நோக்கமும் இல்லாமல் அவர்கள் எவ்வளவு எண்ணிக்கையில் இருந்தாலும் அவர்களை கூட்டம், மக்கள், என்று கூறலாமே ஒழிய அவர்களை ஒரு போதும் ஜமாஅத் என்று அழைக்க முடியாது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எப்போது தன்னுடைய நபித்துவ வாதத்தை மக்கள் மத்தியில் எடுத்து வைத்தார்களோ அன்னாரோடு நான்கு நம்பிக்கை கொண்ட மக்களே உடனிருந்தார்கள், அன்னாரையும் சேர்த்து வெறும் 5 நபர்கள் மட்டுமே இருந்தார்கள், ஆனால் அந்த 5 நபர்களும் ஒரு ஜமாத்தாக இருந்தார்கள், இதனை நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்களா? மீதமுள்ள முழு மக்காவும் 8000 முதல் 10000 மக்கள் இருந்தார்கள் அவர்களோ அல்லது முழு அரேபியாவும் ஒரு ஜமாத்தாக இருக்கவில்லை. முழு அரேபியாவும் ஒரு நோக்கத்திற்காக இணைந்திருக்கவில்லை, ஏதோ ஒரு நோக்கம் இருந்ததாக எடுத்துக்கொண்டாலும் கூட அதனை அடைவதற்கான எந்த செயல் திட்டமும் அவர்களிடம் இல்லை.

அவர்களுக்கு ஒரு பொதுவான நோக்கம் ஒன்று இருந்தது அது ஹஸ்ரத் நபிகள் நாயகம் கொண்டு வந்த ஏகத்துவத்தையும் மனித குலத்தை சீர்திருத்

த்தும் அந்த உயர்ந்த போதனைகளை அழிக்க வேண்டும் என்பதே ஆகும். இது போன்றே இக்காலத்தில் முஸ்லீம்களுக்கு ஏதேனும் ஒரு பொதுவான நோக்கம் இருக்கிறதா? அவற்றினால் அவர்கள் ஒன்றிணைக்கப்பட்டு உள்ளார்களா? அவற்றின் மூலம் அவர்கள் ஒன்றிணைந்து செயல்படுகின்றார்களா? நான் முஸ்லிம்கள் தங்களுக்கிடையேயும் அல்லது அஹ்மதிகள் தங்களுக்கிடையேயும் கருணை உள்ளது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். இருப்பினும் இது தவறாக மிகைப்படுத்தப்பட்ட ஒன்றாகும். பரஸ்பர அனுதாபம் என்பது முஸ்லீகளிக்கிடையையோ அல்லது அஹ்மதிகளுக்கிடையையோ காணப்படுவது எல்லா இடங்களிலும் இருக்கும். இது ஒரு விசயமல்ல. அனைவருக்கிடையிலும் இத்தகைய அனுதாபமும் சகோதரத்துவமும் காணப்படுவதில்லை. இவர்களிடம் வேற்றுமையை அகற்ற எந்த ஒருபொருளும் இல்லை, எந்த இயந்திரங்களாலும் இந்த வேற்றுமையை அகற்ற இயலாது. ஜமாத் உறுப்பினர்களுக்கிடையேகூட கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டன.

இறைத்தூதர்களால் தோற்றுவிக்கப்பட்ட சமூகத்தில் கூட அவருடைய வாழ்நாளிலேயே கருத்து வேறுபாடுகள் கொண்டிருந்தனர். இஸ்லாத்தின் தூயதூதர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது காலத்தில் அன்சார் மற்றும் முஜாஹீரின் பல கருத்து வேறுபாடுகள் கொண்டிருந்தனர். இவ்வாறு குலத்தின்அடிப்படையிலும் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டது. ஆனால் இந்த கருத்து வேறுபாடுகள் எப்போது ஹஸ்ரத் நபிகள்நாயகம் (ஸல்) அவர்களிடம் கொண்டு செல்லப்பட்டதோ அப்போதே அக்கருத்து வேறுபாடுகள் முடிவுக்கு வந்தன. ஆனால் சகோதர, சகோதரிகள் கட்டாயம் கவனிக்க வேண்டியவை அல்லாஹ்வின் தீர்ப்பே இறுதியானது என்பதாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எப்போதும் அல்லாஹ்வின் தீர்ப்பையே இறுதியானதாக கொண்டார்கள், குறிப்பாக நயவஞ்சகர்கள் பற்றி அல்லாஹ் அவர்கள் தொழுபவர்களாக இருப்பினும் அல்லாஹ் அவர்களை மன்னிக்க மாட்டான் என்று தீர்ப்பளித்தான். இந்த உண்மையான கருத்தும் ஜமாத்தின் சாராம்சம் ஆகும், இன்றைய நாட்களில் முஸ்லிம்கள் மற்றும் அஹ்மதிகளிடமோ இதனை காண இயலாது. மேலும் முஸ்லிம்களில் வேறு எந்த ஒரு பிரிவினரிலும் இதனை காண இயலாது. பல முஸ்லீம் நாடுகள் உள்ளன, அவை மிகப்பெரிய அளவிலும் உள்ளது, இவைகளுக்கு மத்தியில் பாகிஸ்தா

ன் சமீபத்தில் அல்லாஹ்வின் அருளால் நிறுவப்பட்டது, ஆனால் இஸ்லாம் என்பது, பாகிஸ்தான், அல்லது எகிப்தோ, ஆப்கானிஸ்தானோ, சவுதி அரேபியாவோ அல்ல, இஸ்லாம் என்பது எது? ஒற்றுமையால் முஸ்லீம்களை பினைக்கின்றதோ அதுவேயாகும். இவ்வாறு ஒரு ஒற்றுமையோ அல்லது அமைப்போ இருக்கவில்லை. ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்கள் 1901 ல் தோற்றுவித்த அஹ்மதிய்யா சமூகத்தில் இத்தகைய ஒற்றுமை இப்போது இல்லை. எப்போது நான் இறை வெளிப்பாடுகளை பெறுவதாக கூற துவங்கினேனோ அப்போது, அதன் தலைவரால் எவர்கள் இத்தகைய வெளிப்பாடுகளை நம்புகிறார்களோ அவர்கள் "முட்டாள்தனம்" கொண்டவர் என்று அழைக்கப்பட்டார்கள். .மற்றும் ஜமாத்திற்கெதிராக கிளர்ச்சி செய்பவர்கள் என்றும் முத்திரை குத்தப்பட்டனர். இதுதான் இஸ்லாமா? இதுதான் ஒற்றுமையின் அடையாளமா? தகுந்த காரணங்களின்றி அஹ்மதிகளான எங்களை ஜமாத் அமைப்பிலிருந்து வெளியேற்றினார்கள், எங்களிடமிருந்து எந்தவொரு விளக்கத்தையும் பெறாமல் ஆணத்துடன் இவ்வாறு நடந்து கொண்டார்கள். இருப்பினும் அஹ்மதிய்யா சமூகம் முஸ்லீம் உலகை ஒரு தனி ஜமாத்தாக ஒற்றுமையின் கீழ்கொண்டு வருவதற்கு எதுவும் செய்யவில்லை. மேலும் முஸ்லிம்கள் தனித்தனி அரசியல் கொள்கையை கொண்டவர்கள் ஆகையால் அவர்கள் பிரிந்துகிடக்கின்றன. அவர்களுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்த எந்த ஒரு திட்டமும் இல்லை, அவர்களை ஒன்றினைக்க கூடிய சக்தி வாய்ந்த ஒரு குரலும் அவர்களிடம் இல்லை.

அஹ்மதிய்யா சமூகம் திருக்குரான், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது முன்மாதிரி, மற்றும் இவற்றின் உண்மை தன்மையை விளக்கும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக்கொண்ட அருளுக்குரிய சமூகமாகும். ஆனால் 100 ஆண்டுகள் கழிந்து என்னவானது என்றால் அதாவது 2001 இல் இஸ்லாம் அதன் கனிகளை கொடுப்பதற்காக அல்லாஹ் இந்த எளியவனை அவர்களுக்கிடையே எழுப்பினானோ அவர்கள் அதன் மீது நம்பிக்கை கொள்ளவுமில்லை மற்றும் அதனை கேலிக்குறியதாக எடுத்து கொண்டனர். அவர்கள் யூதர்கள் தங்களிடம் தோன்றிய தூதர்களிடம் எவ்வாறு நடந்து கொண்டார்களோ அதனை போன்றே நடந்து கொண்டார்கள். இவ்வாறே ஜமாத் அஹ்மதிய்யா அல் முஸ்

லீமினை 2001 ஏற்படுத்தி 8 மே 2003 அதிகாரப்பூர்வமாக பதிவும் செய்யப்பட்டது. இந்த எளியவன் மூலமாக மேலும் இறைவெளிப்பாடுகளுக்கு சாட்சியாகவும் இருந்தார்கள். ஆனால் 3 - 4 ஆண்டுகளுக்குப் பிறகு இவர்களும் யூதர்களை போன்று இந்த வெளிப்பாடுகளை கேலியும் கிண்டலும் செய்ய தொடங்கினர்.

அவர்கள் அல்லாஹ்விடமிருந்து பெற்று இந்த எளியவன் அறிவிக்கும் ஒவ்வொரு இறைவெளிப்பாடுகளை பற்றி சந்தேகமும், தப்பெண்ணமும் கொண்டார்கள். இறுதியாக அவர்களும் அல்லாஹ்வின் தூதர் மீதும் அவர் பெறும் இறைவெளிப்பாடுகளின் மீதும் நம்பிக்கையற்றவர்களாக ஆகிவிட்டனர். அல்லாஹ்வின் பெயரிட்ட அந்த ஜமாத்திலிருந்து என்னை வெளியேற்ற குறுக்கு வழிகளை கையாண்டார்கள். அவர்கள் தங்களின் சந்தேகங்களையும், பொறாமையையும் வெளிப்படுத்திய போது அல்லாஹ் அவர்களிடம் எவ்வாறு நடந்து கொண்டான்? அல்லாஹ் தன் தூதரை அவர்களுக்கிடையே இருந்து அவன் விலக்கி கொண்டான். என்னுடன் இணைந்திருந்த மக்களுடன் பல்வேறு நாடுகளிலிருந்து பல நிறம் கொண்ட மக்களை அவன் தன்னுடைய ஏகத்துவத்தில் இணைத்தான். நாம் இஸ்லாம் என்பது எந்த ஒரு பகுதிக்கோ அல்லது ஒரு நாட்டிற்கு மட்டுமே சொந்தமானது அல்ல என்பதை கட்டாயம் நினைவில் கொள்ள வேண்டும். இஸ்லாம் என்பது எந்த ஒரு குறிப்பிட்ட நாட்டின் அதாவது அரேபியா, பாகிஸ்தான் போன்றவற்றின் பெயரல்ல, அது உண்மையான முஸ்லிம்களின் அமைப்பும் அதன் உண்மையான செயல் திட்டமும் மற்றும் அதன் செயல்பாடுகளுமே ஆகும். உலகில் முஸ்லீம்களை ஒரே சமூகமாக ஒன்றினைக்க எந்தவொரு அமைப்பும் இல்லை, அவர்களுக்கிடையே ஏதாவது இருக்கிறது என்றால் அது ஒரு அரசியல், சமூக, இனவாத குழுக்களேயாகும். இறைவன் தன்னுடைய புனித வேதத்தில் நினைவூட்டுகின்றான் அது மனித குலத்திற்கு தன் புறமிருந்து இறை வழிகாட்டுதலுக்காக தன் புறமிருந்து தீர்க்கதரிசிகள் வருவார்கள் என்பதையும் அவர்கள் மீது மனிதர்கள் நம்பிக்கை கொள்ள வேண்டும் என்பதை பற்றியும் கூறுகின்றான்.

இறைவன் உயர்ந்தவன், மகிமைமிக்கவன் ஆனால் மனிதனோ மிக்க பலஹீனமானவன். இன்னும் மனிதன் ஒரு உயர்ந்த நோக்கத்திற்காக படைக்

கப்பட்டுள்ளான் என்பதும் முற்றிலும் உண்மையாகும். சுவர்க்கமும், பூமியும் மற்றும் அனைத்தும் ஒரு நோக்கத்துடன் படைக்கப்பட்டுள்ளது.

திருக்குரான் இவ்வாறு கூறுகிறது நாம் வானங்களையும், பூமியையும் மற்றும் அவ்விரண்டிற்கிடையே உள்ளவற்றையும் விளையாட்டிற்காகப் படைக்கவில்லை. (திருக்குர்ஆன் 44:39)

ஒரு குறிப்பிட்ட நோக்கமே அனைத்து படைப்புகளையும் இயக்குகிறது. அது மனிதன் அவனுடைய இறைவனது பண்புகளை கொண்டவனாக ஆக வேண்டும் என்பதாகும், அது மனித இனம் தொடர்ந்து வாழவும், அவன் இறை பண்புகளை பெற்று மற்றவர்களுக்கும் அவன் அதனை போதித்த வேண்டும் என்பதாகும், அவர்கள் மற்றவர்களுக்கு அத்தகைய வழிமுறைகளை காட்டி தர வேண்டும் என்பதாகும். இது ஆரம்ப காலம் முதல் இதுவே இறை நியதி ஆகும். இறைவனின் நிரந்தரமான சட்டம் என்னவென்றால் எப்போதெல்லாம் மனித சமூகம் நிராகரிப்பிலும், சந்தேகத்திலும் மூழ்கின்றதோ அப்போதெல்லாம் இறைவன் தன்னுடைய தூதரை அனுப்புவதன் மூலமாக உலகத்தையும் மனிதனையும் அழிவிலிருந்து பாதுகாக்கின்றான். இது தவிர்க்க முடியாததாகும், ஏனென்றால் நம்முடைய காலத்தில் இறைத்தூதர் அவனுடைய பெயரை கொண்டு வெளிப்பட்டுள்ளார். அவ்வாறு ஒருவரை அவன் தேர்ந்தெடுக்கின்றான், ஆனால் அவருடைய வருகை நிச்சயமானதாகும், இறைவன் எப்போதும் தன்னுடைய படைபினங்களுக்கு வழிக்காட்ட கூடியவனாவான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பின்பற்றுபவர்கள் நம்பிக்கை இழந்து போவதும், சீர்குலைந்து போவதும் நினைத்து பார்க்க முடியாததாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பின்பற்றுபவர்களுக்கு மேலும் அதிகப்படியான வாக்குறுதிகள் உள்ளன. அவர்கள் வானத்திலிருந்து வழிகாட்டப்பட்டவர்கள், ஒவ்வொரு நூற்றாண்டின் தொடக்கத்திலும் தோன்றும் முஜத்தீத்துகள் என்னும் சீர்திருத்தவாதிகள், இவர்களே. இஸ்லாத்தின் மறுமலர்ச்சியை நூற்றாண்டுக்கிடையில் ஏற்பட செய்பவர்கள். இவர்கள் அந்தந்த காலங்களில் தோன்றி இஸ்லாத்தில் ஏற்படுத்தப்படும் நெருக்கடியை தீர்க்கின்றார்கள். இஸ்லாமிய வரலாறு இவர்களை முஜத்தீத்-சீர்திருத்தவாதிகள் என்றும் மறுமலர்ச்சியாளர்களென்றும் பதிவு செய்துள்ள

து. இவர்களின் வருகையை பற்றி தான் இஸ்லாத்தின் தூய தூதர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு முன்னறிவித்துள்ளார்கள்,

**"நிச்சயமாக அல்லாஹ் ஒவ்வொரு நூற்றாண்டின் தொடக்கத்திலும் ஒரு சீர்திருத்தவாதியை தோன்ற செய்வான்" (நூல்:-அபுதாவூத்- தொகுதி-2, பக்கம். 241)**

எப்போதெல்லாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பின்பற்றும் மக்கள் சைத்தானில் வலையில் வீழ்கின்றார்களோ அப்போதெல்லாம் அவர்களுக்கு நேர்வழி காட்ட இவர்கள் தோன்றுகின்றனர். இந்த வாக்குறுதி குறிப்பாக நம்முடைய காலத்தோடு தொடர்புடையது. நம்முடைய காலத்தில் தஜ்ஜால் வெளிப்பட்டு கிறிஸ்தவத்தின் ஆதிக்கமும் மற்றும் இஸ்லாத்தின் மீது கடுமையான தாக்குதல் தொடுக்கப்பட்ட காலமாகும், மேலும் முஸ்லிம்கள் பல்வேறு தேசங்களில் அடிமை படுத்தப்பட்ட காலமும்மாகும். நம்முடைய காலத்தில் தோன்றியவர் **ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது பிரதிபிம்பமாக தோன்றினார்கள். அல்லாஹ்வால் தேர்ந்தெடுக்கப்பட்ட நான் இக்காலத்தில் இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்காக தோன்றியவனாவேன்.** என்னுடைய முதல் வாதத்தில் (முஹைய்தீன் அல் கலீபத்துல்லாஹ்) நான் முஸ்லீம்களுக்கும், அஹ்மதிகளுக்கும் வெளிப்புற நம்பிக்கைக்கும் உள்ளார்ந்த நம்பிக்கைக்கும் வேறுபாட்டை உணர்த்தியுள்ளேன். உள்ளார்ந்த நம்பிக்கையே அதிமுக்கியமானது என்பதை விளக்கியுள்ளேன். அல்லாஹ்வின் கட்டளை படி நான் இந்த ஜமாத்துல் ஸஹீஹ் அல் இஸ்லாம் அமைப்பை தோற்றுவித்தேன், எனவே இதில் இணையும் ஒவ்வொரு உறுப்பினரும் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை அளிப்பவராக இருக்க வேண்டும், இதுவே ஜமாத்தின் கொள்கையுமாகும். இக்காலத்தின் தூது செய்தி என்னவென்றால் அது முஸ்லீம்களும், அஹ்மதிகளும் ஆன்மீக நோய்க்கு உட்பட்டு உண்மையான இறை நம்பிக்கையை இழந்து விட்டார்கள் என்பதுதான். உலகில் இவர்களின் மகத்துவம் அகன்று விட்டது, இன்னும் இவர்கள் உலக விசயங்களுக்காக மட்டுமே கவலை கொள்கின்றனர். **இவர்களது பார்வையில் முன்னேற்றம் என்பது, அது கல்வி, வணிகம், அரசியல் முன்னேற்றம் என்பதேயாகும்,**

முஸ்லீம்களும் அஹ்மதிகளும் படைத்தவனை விட படைப்புகளுக்கே முன்னுரிமை வழங்குகின்றனர். இவர்களது இந்த நோக்கங்களும், இலட்சியங்களும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது கொள்கையிலிருந்து வெகு தொலைவில் உள்ளது. முஸ்லிம் சமூகம் எதனை முன்னேற்றம் என்று கூறுகிறதோ அத்தகைய அடிப்படையில் ஒரு சமூகத்தை கட்டியமைக்க அன்னார் ஒருபோதும் விரும்பியதில்லை. அன்னார் இது போன்ற நம்பிக்கையாளர்களை உண்டாக்க விரும்பியதில்லை, அவர்கள் சத்திய விசுவாசிகளை உண்டாக்கவே விரும்பினார்கள். ஒரு உண்மையான முஸ்லிம் திருக்குரான் அடிப்படையில் நடப்பவராவார். அவரின் முகம் எப்போதும் இறைவன் பக்கம் திரும்ப கூடியதாகும்.

**அவ்வாறான்று. எவர் தம்மை அல்லாஹ்விடம் முழுமையாக ஒப்படைத்து நற்செயல் செய்பவராகவும் விளங்குகிறாரோ அவருக்குரிய நற்கூலி அவருடைய இறைவனிடத்தில் உண்டு. அவர்களுக்கு (வருங்காலத்தைப் பற்றிய) எவ்வித அச்சமும் இருக்காது. (இறந்த காலம் பற்றி) அவர்கள் துயரம் அடையமாட்டார்கள். (திருக்குர்ஆன் 2:113)**

இத்தகைய நம்பிக்கையாளர்கள் அல்லாஹுக்காகவே வாழ்கின்றனர். அவருடைய நோக்கங்களும், இலட்சியங்களும் இவ்வுலகில் அனைத்தும் மார்க்கத்திற்காக மட்டுமே இருக்கும். ஜமாத்தின் முக்கியமான குறிக்கோள் என்னவென்றால் அது முஸ்லீம்களை ஒன்றினைத்து அவர்களை ஒரே செயல் திட்டத்தின் கீழ் கொண்டு வருவதாகும், எனவே இந்த ஜமாஅத்தை எவரும் ஒரு பிரிவினை வாத இயக்கம் என்று குற்றம்சாட்ட இயலாது. இதனை இன்னும் தெளிவாக கூறுவதென்றால் முஸ்லிம்களுக்கு ஒரு ஜமாஅத் இல்லாமல் இருந்தது, இப்போது அத்தகைய ஒரு ஜமாஅத் தோற்றுவிக்கப்பட்டுள்ளது என்பதாகும். ஒரே நம்பிக்கை, ஒரே கிப்லா, ஒரே தொழுகை என அனைத்திலும் ஒன்றுபட்ட நம்பிக்கை கொண்ட அஹ்மதிகளுக்கிடையே ஏன் தனியாக ஒரு ஜமாத்தை நிறுவ வேண்டும்? என்று கேட்பவருக்கும் இந்த விளக்கத்தின் பக்கம் அழைக்கிறேன். நான் அவர்களிடம் கேட்கிறேன் மீண்டும் முஸ்லீம்களை ஒன்றினைப்பதற்கான காலம் வரவில்லையா? இன்னும் இதற்காக எவ்வளவு காலம் காத்திருப்பது?

நிச்சயமாக அஹ்மதிய்யா கிலாஃபத்தால் முஸ்லீம்களை ஒன்றினைக்க இயலும்தான். ஆனால் அனுபவம் எதனை காட்டுகிறதென்றால் எப்போது ஜமாத்தின் அமைப்பு ஒரு தனி நபராலோ அல்லது ஒரு குறிப்பிட்ட தேசத்தின் மக்களாலோ அதிகாரம் செய்யப்படுகிறதோ அப்போது அது மற்ற அதிகாரிகளையும் மற்றும் தேசத்தை பொறாமை மற்றும் கழ்புணர்ச்சியின் பக்கம் இட்டு செல்கிறது. இத்தகைய பிரச்சினையை எதிர்கொள்ள இதற்கு எதிராக அவர்கள் எல்லாவற்றையும் செய்கின்றார்கள்.

எவ்வாறாயினும், முஸ்லிம்களை ஒன்றிணைக்கும் இயக்கம், பொதுவான முஸ்லிம்களால் தொடங்கப்பட்டால், அப்படி இருந்தால் இயக்கம் மத நோக்கங்களால் ஈர்க்கப்பட்டுள்ளது, இது எந்த அரசியல் அல்லது இன பொறாமைகளையும் தூண்டாது. இது ஒருவேளை குழுவாத பிரிவினையை முன்னெடுக்கலாம், அரசியல் வெறுப்புணர்வை தூண்டலாம், அதில் எந்த தேசத்தின் நபர் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டாரோ அவர் அந்த தேசத்தாரிடம் சலுகையுடன் நடந்து கொள்ளலாம். ஜமாத்துல் ஸஹீஹ் அல் இஸ்லாம் அரசியலில் எந்த பங்கும் பெறாது. ஜமாஅத்தின் ஒரே நோக்கம் ஆன்மீக நல்லொழுக்க வாழ்வும், முஸ்லிம்களின் இறை நம்பிக்கையை அதிகரிப்பதுமே ஆகும், இஸ்லாத்தின் எதிரிகளுக்கு எதிராக ஒரு ஒற்றுமை மிக்க நம்பிக்கையாளர்களின் ஜமாஅத்தை ஏற்படுத்துவதாகும். இத்தகைய நோக்கங்களும், இலக்குகளும் கொண்ட ஜமாஅத், அதில் இணையும் உறுப்பினர்கள் திருக்குரான் போதனைகளின்படி தங்களது வாழ்வினை அமைத்து கொள்ளவில்லையென்றால் அவர்கள் அல்லாஹ்விடத்தில் உண்மையான நம்பிக்கையாராக இருக்கமாட்டார்கள் என்பதை அறிவுறுத்துகிறது. இத்தகைய நம்பிக்கையாளர்கள் வெளித்தோற்றத்தை மட்டுமே காட்டகூடியவர்கள். ஆனால் அல்லாஹ் வெளித்தோற்றத்தை பார்ப்பதில்லை அவன் உள்ளத்தை பார்பவனாக இருக்கின்றான். எனவே ஜமாஅத் புறசெயலை விட ஆன்மீகத்தில் ஆன்மாவின் நிலைக்கே முக்கியத்துவம் அளிக்கிறது. எனவே இஸ்லாம் என்பது ஞானத்தால் கட்டமைக்கப்பட்ட ஒன்றாகுமே தவிர ஆழ்ந்த கருத்துக்கள் அற்ற ஒரு தனி மனிதனின் வார்த்தைகள் அல்ல. இறைவன் எப்போதும் வெளிப்புற தோற்றத்தை பார்பதில்லை அவன் தூய்மையான உள்ளத்தை பார்ப்பவனாக இருக்கின்றான்.

அத்தகைய இறைவனுடனான தொடர்பு உடல் ரீதியாக ஏற்படாது, மாறாக அது அன்பு மற்றும் இறையச்சத்தால் ஏற்படக்கூடியதாகும். மார்க்கம் ஐந்து தூண்களால் கட்டமைக்கப்பட்டுள்ளன. அல்லது மனிதனின் வெறும் வெளிப்புற செயல்களினால் மட்டுமானது அல்ல. இது ஐந்து புலன்களுக்கான அல்லது வெளிப்புற செயல்களுக்கான விதிகளை முன்வைத்தால், அது மனிதனின் உணர்வுகள், எண்ணங்கள் மற்றும் நோக்கங்களை பாதிக்கும் பொருட்டு; அவரது புத்தியைக் கூர்மைப்படுத்த மற்றும் அவரது இதயத்தின் இடைவெளிகளை சுத்திகரிக்கவும். **இத்தகைய முறையால் மனிதனுக்கு இறைவனின் அருகாமை அவனுக்கு கிடைக்கும் மேலும் அவனுடன் உரையாடும் பாக்கியமும் கிடைக்கலாம். இத்தகைய மகத்துவம் மிக்க உண்மையின் அடிப்படையில் தான் ஜமாத் இஸ்லாத்தின் உயர்ந்த வழி வகைகளை திறந்துள்ளது.** இது ஒரு சிறிய ஜமாத்தாக இருப்பினும் அது உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கும் ஜமாத்தாகும் மேலும் மார்க்கத்திற்காக அனைத்து தியாகங்கள் செய்யும் இயக்கமாகும். மற்றும் தூய தூதர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது ஆன்மீக ஒளியை பரப்புவதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு இறை இயக்கமாகும். வித்தியாசம் என்னவென்றால் அது இறைவெளிப்பாடுகள் தொடர்வது குறித்து இஸ்லாம் மட்டுமே மனிதனுக்கு நற்செய்தியை வழங்குகிறது. இஸ்லாமே மனிதன் தன்னுடைய இறைவனை நேரடியாக தொடர்பு கொள்ள முடியும் என்பதை போதிக்கிறது. ஆன்மீக அருள் என்பது பற்றி பெருமானார் (ஸல்) அவர்கள் இது பற்றியே குறிப்பிடுகின்றார்கள். இது ஒருபோதும் முஸ்லிம்கள் கல்வி மற்றும் தொழிலில் முன்னேறுவது பற்றியதல்ல. முஸ்லீம் அல்லாத மக்கள் இத்தகைய துறைகளில் முன்னனியில் இருக்கின்றார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது ஆன்மீக அருள் என்னவென்றால் அது அன்னாரை பின்பற்றும் ஒருவரால் இறைவனை நேரடியாக தொடர்பு கொள்ள முடியும் என்பதாகும், இதன் மூலமாக இறைவனை அவனது ஆன்மாவாலும், உயிராலும் அவனுடன் ஒன்றிவிடவும், இதன் மூலம் அந்த அருளாலனின் இனிமையான குரலையும் மற்றும் அவனுடைய தொடர்பினையும் வெளிப்படுத்தலாம். இதுவே நபிமார்களை பின்பற்றுவதால் கிடைக்கும் பிரத்யேகமான அருளாகும். **இந்த அருளே முஸ்லிம்கள் மற்றும் முஸ்லிம் அல்லாதவர்களுக்கிடையேயான வித்தியாசமாகும். இதுவே இஸ்லாத்தின் தனிச்சிறப்பாகும். இதனை முஸ்லிம்களும், அஹ்மதிகளும் மறந்துவிட்டனர்.**

**இதனையே இவர்களது கவனத்திற்கு ஜமாத்துல் ஸஹீஹ் அல் இஸ்லாம் கொண்டு வருகிறது. ஒரு இரட்சிப்பிற்கான கேள்வி, அஹ்மதிய்யா நம்பிக்கையின்படி அஹ்மதியல்லாதவர்கள் அனைவரும் நரகத்திற்குரியவர்கள். இந்த தவறான கருத்து இரண்டு காரணங்களால் ஏற்பட்டதாகும் அது தப்பெண்ணம் மற்றும் காழ்ப்புணர்ச்சி ஆகும். நாங்கள் அஹ்மதிகள் மட்டுமே சுவர்க்கத்திற்குரியவர்கள் என்றும் மற்ற அனைவரும் நரகத்திற்குரியவர்கள் என்றும் நம்புவதில்லை. எங்களுடைய நம்பிக்கையின் படி ஒரு அஹ்மதி நரகம் செல்லுவதும், அஹ்மதியல்லாத ஒருவர் சுவர்க்கம் செல்வதும் சாத்தியமேயாகும். நற்கூலி வெறும் வாய் வார்த்தைகளால் கிடைக்க இயலாது, அது உளமார்ந்த நற்செயல், கடமைகளை நிறைவேற்றுவது, கட்டுபடுவது, ஒற்றுமை இதனால் ஏற்படுவதாகும்.**

மறுபுறம் ஒருவரும் நரகத்திற்கு செல்லமாட்டார்கள், அவர்கள் ஒரு வேளை நம்பிக்கை இல்லாமல் அல்லது நற்செயல் செய்யாமல் இருந்தால் ஒழிய. இவர் ஒருவேளை இவ்வுலகில் முக்கியமானவற்றின் மீது நம்பிக்கை கொள்ளாது இருக்கலாம், ஆனால் இவர் நரகவாசி அல்ல, அவருக்கு சுவர்க்கத்திற்கும் நகரத்திற்குமான வழி அவருக்கு முழுமையாக காட்டி தரப்படாத வரை. அதாவது குழந்தையிலேயே மரணிப்பவரும், காட்டில் வாழும் வயோதிகரும், கடந்த காலம் பற்றி அறியாத வயோதிகரும், மற்றும் மனநிலை பாதிக்கப்பட்டவர்களும், இறைவன் முன் பதிலளிக்க வேண்டியவர்கள் அல்ல. நியாயத்தீர்ப்பு நாளில், அத்தகைய நபர்கள் மீண்டும் உயிர்ப்பிக்கப்படுகையில், அவர்கள் பூமியில் செய்த செயல்களுக்கு தீர்க்கதரிசி அவர்களுக்கு சாட்சியாக இருக்கிறார். **மனித குலம் பூமியில் நிலைப்பெற்று இருக்கும் வரை இறைவன் தொடர்ச்சியாக தன்னுடைய திருத்தூதர்களை அனுப்பி அவர்கள் மூலமாக தன்னுடைய இறைவெளிப்பாடுகளை இறக்குவான்,** இதுவே இஸ்லாத்தின் மறுமலர்ச்சியுமாகும். இத்தகைய நபிமார்களே இஸ்லாத்தின் தூய தூதரை பின்பற்றி வழிகேட்டிலிருந்து நேர்வழியின் பால் அழைப்பவராவார்கள். இவ்வாறு இறுதி தீர்ப்பு நாளில் தூதர்கள் யாருக்கு நற்சான்று பகர்கின்றாரோ அல்லது எதிராக சாட்சி கூறுவார்கள், அதன் பின்

கேள்வி கணக்கு அடிப்படையில் தீயவர்கள் நரகிற்கும், எவர்கள் உண்மைக்கு சாட்சி பகன்றார்களோ அவர்கள் சுவர்கத்திற்கும் செல்வார்கள். இத்தகைய நம்பிக்கை அஹ்மதிய்யாவிற்கு எதிராக கருதப்படுகிறது, எவர்கள் தன்னை அஹ்மதிய்யா சமூகத்தில் இணைத்து கொள்ளவில்லையோ அவர்கள் அனைவரையும் நரகவாசிகளாக கருதப்படுகிறது.

இவ்விசயத்தில் எங்களின் நம்பிக்கை மிகத் தெளிவானது. எவர் உண்மை தன்னிடம் வந்த போதும் அதிலிருந்து தன்னை முகம் திருப்பிகொள்கின்றாரோ, உண்மையை ஆராய முற்படவில்லையோ, அல்லது உண்மைக்கான விளக்கம் கூறப்பட்டபோது அதனை செவியேற்க வில்லையோ, மனிதனுக்கு வழிக்காட்ட இறைவன் தன் புறமிருந்து அனுப்பும் ஒருவரை பிடிவாதமாக மறுப்பவரும் இதற்காக இறைவனிடம் பதில் கூறவேண்டியது அவசியமாகும். ஆனால் இத்தகைய மனிதன் கூட இறைவன் தன்னுடைய விசாரணையில் கருணை மற்றும் அருளின் அடிப்படையில் மன்னிக்கப்படலாம். இறைவன் தன்னுடைய கருணையை அவனே ஆழ்கின்றான், மாறாக நாம் அல்ல. நாம் அவனுடைய அடிமைகளே ஆவோம். மற்றவருக்கு அவன் கொடுப்பதிலோ அல்லது தடுப்பதிலோ நாம் தலையிட இயலாது. இறைவன் நம்முடைய தலைவனும், அரசனும், படைப்பாளனும், நியாய தீர்ப்பு நாளின் அதிபதியும் ஆவான். நம்முடைய பார்வையின்படி மன்னிப்பதற்கு தகுதியற்றவராக இருக்கும் ஒருவரை இறைவன் தன்னுடைய ஞானம் மற்றும் அறிவின்படி மன்னிக்க விரும்பினால் அதனையாராவது தடுக்க இயலுமா?

எனவே எனது அன்பிற்குரிய சகோதர சகோதரிகளே சுருக்கமாக நாம் கட்டுப்படவேண்டியது நம்முடைய கடமையாகும். என்னால் இதனை விரிவாக விவாதிக்க இயலாது. ஜமாத்துல் ஸஹீஹ் அல் இஸ்லாத்தின் அனைத்து செய்தியையும் வாத பிரதிவாதத்திற்கு உட்படுத்த இயலாது. நான் ஜமாத்தின் கொள்கை மற்றும் நோக்கங்களும் என்னவென்று விளக்கியுள்ளேன். நான் உங்களிடம் இதுகுறித்து ஆழ்ந்து சிந்திக்கும்படி கேட்டுக்கொள்கிறேன், கடந்தகால மார்க்கங்கள் இந்த ஆன்மீக தேவைகளை நிறைவு செய்ததின் மூலமே பூமியில்நிலை பெற்றன. மார்க்க இயக்கங்கள் அதன் உண்மையான மார்க்க நிலையில் வெற்றி பெற்றன, அவர்களது ஆயுதமாக உளத் தூய்மை

மற்றும் அவர்களது தியாகமாகவுமே இருந்தன. அவர்கள் தங்களின் முன்மாதிரியால் மற்றவர்களை ஈர்த்தனர், இதுவே ஆதமின் காலம் தொட்டு வரும் நடைமுறையாகும், அது இப்போதும் மாறுவதில்லை. ஆன்மீக வழிமுறைகளிலேயே கடந்த காலங்களில் தன்னுடைய வழிக்காட்டுதலை இறைவன் பரப்பினான், எனவே இஸ்லாத்தின் தூது செய்தியும் நம்முடைய இந்த காலத்தில் ஆன்மீக வழிமுறைகள் மூலமே பரப்பப்படும். ஆகையால் உங்கள் ஆன்மாவிற்காகவும், இனி அடுத்துவரும் தலைமுறைக்காகவும், நீங்கள் உற்றார், உறவினர்காகவும், உங்கள் தேசத்திற்காகவும் இறைவன் புறமிருந்து வரும் இந்த தூதுசெய்திக்கு செவி சாயுங்கள். இதனைக் கவனத்துடன் புரிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள், இதனால் இறைவனது அருளுக்குரிய வாசல் உங்களுக்காக திறக்கப்படலாம், இதனால் இஸ்லாத்திற்கு மாபெரும் முன்னேற்றமும் கிடைக்கும் அது ஒருபோதும் பின்னடவை நோக்கி செல்லாது. இத்தகைய கடின உழைப்புதான் தேவைப்படுகிறது. எனவே எங்களோடு இணையுங்கள் மேலும் இஸ்லாத்தின் வெற்றிக்கு ஒன்றினைந்து பாடுபடுவோம்.

உங்களுக்கு அழைப்பு கொடுக்கப்படும் இவ்வழி எளிதானது அல்ல. இதற்கு தியாகங்கள் தேவை, சுய கட்டுப்பாடு மற்றும் அநீதிகளை சகித்து கொள்ளுதல் ஆகிய உயர்ந்த முன் மாதிரிகள் தேவை. ஆனால் இவர்கள் இறைவன் கூறும் வழியில் வாழ்பவர்கள், எவர்கள் துன்பங்களை சகித்துக் கொண்டு தன் உயிரையும் தியாகம் செய்வார்களோ அவர்களுக்குறியது. எவர்கள் இறைவனுக்காக மரணிக்க துணிகின்றார்களோ அவர்களே இறைவனை காண்கின்றனர். இஸ்லாம் மீண்டும் உயிர்தெழ முஸ்லிம்கள் மரணத்தை அதற்காக விரும்புவர்களாக வேண்டும். தைரியம் கொள்ளுங்கள், கசப்பான பானத்தை அருந்துங்கள், எனவே மரணத்திற்கு தயாராகுங்கள் பிறகு இஸ்லாம் உயிருள்ள மார்க்கம் என்பதும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கொண்டு வந்த இஸ்லாம் மீண்டும் புத்துயிர் பெற்று மீண்டும் பசுமையாக்கப்படும், நாம் இவ்வுலகில் மரணிக்க தயாரானல் மறுமையில் என்றும் முடிவு பெறாத நித்திய வாழ்வினை பெற்றுக் கொள்வோம், ஆமீன்.



# கலீபத்துல்லாஹ்

மனித குலம் பூமியில் நிலைப்பெற்று இருக்கும் வரை இறைவன் தொடர்ச்சியாக தன்னுடைய திருத்தூதர்கள் அனுப்பி அவர்கள் மூலமாக தன்னுடைய இறைவெளிப்பாடுகளை இறக்குவான், இதுவே இஸ்லாத்தின் மறுமலர்ச்சியாகும். இத்தகைய நபிமார்களே இஸ்லாத்தின் பரிசுத்த தூதரை பின்பற்றி வழிகேட்டிலிருந்து நேர்வழியின் பால் அழைப்பவராவார்கள். இவ்வாறு இறுதி தீர்ப்பு நாளில் தூதர்கள் யாருக்கு நற்சான்று பகர்கின்றாரோ அல்லது எதிராக சாட்சி கூறுவார்கள்,